# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 1997 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகச் சட்டம்

---

(1997 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1997 ஒற்றோபர் 10 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : 12.60 தபாற் செலவு : 4.60

# 1997 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகச் சட்டம்

[1997 ஒக்தோபர் மாதம் 06 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ. - ஓ 57/95
4324

**தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தைத் தாபிப்பதற்கும் ஏற்பாடு செய்வதற்கும் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

1. இச்சட்டமானது, 1997 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் (இதனகத்திதன் பின்னர் "நியமிக்கப்பட்ட திகதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் I

### தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தைத் தாபித்தல்

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தைத் தாபித்தல்.

2. (1) (இதனகத்திதன் பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம் என அழைக்கப்படவேண்டிய நிறுவகமொன்று, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) நிறுவகமானது (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்படும் பெயர்கொண்டு, இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் அப்பெயர்கொண்டு வழக்குத் தொடரலாம் அத்துடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்.

நிறுவகத்தின் பணிகள்.

3. நிறுவகத்தின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும். —

(அ) கடும்பாரமிழுக்கும் வாகனங்கள் உட்பட, சகல விதமான வகுதிகளையும் சார்ந்த மோட்டார் வாகனங்களைத் தொழிற்படுத்தும் அல்லது செலுத்தும் சாரதிகளுக்கும் தொழிற்படுத்துநர்களுக்கும் மருத்துவ சேவைகளையும் உதவியையும் வழங்குதல்;

(ஆ) கடும்பாரமிழுக்கும் வாகனங்கள் உட்பட, சகலவிதமான வகுதிகளையும் சார்ந்த மோட்டார் வாகனங்களினதும் சாரதிகளையும் தொழிற்படுத்துநர்களையும் சோதித்து, அத்தகைய சாரதிகளுக்கும் தொழிற்படுத்துநர்களுக்கும் உடல் மற்றும் உளத் தகுதிச் சான்றிதழ்களை வழங்குதல்;

(இ) கடும்பாரமிழுக்கும் வாகனங்கள் உட்பட, சகலவிதமான வகுதிகளையும் சார்ந்த சாரதிகள் மீதும் தொழிற்படுத்துநர்கள் மீதும் மருத்துவப் பரிசோதனை கொண்டு நடாத்தி அவர்களின் தவ்வுப் பொருத்தம் தொடர்பாகவும் தகுதி தொடர்பாகவும் விதப்புரைகளைக் கொடுத்து தவுதல்;

(ஈ) எந்த வகுதியைச் சார்ந்த மோட்டார் வாகனங்களையும் உள்ளடக்கிய விபத்துக்களின் விடயங்களில் மருத்துவ சேவைகளும் உதவியும் வழங்குதல்;

(உ) சகல விவரணங்களையும் சேர்ந்த மோட்டார் வாகனங்கள் உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் பொருத்தமும் தகுதியும் வாய்ந்த ஆட்களினால் மாத்திரம் தொழிற்படுத்தப்படுகின்றன அல்லது செலுத்தப்படுகின்றன என ஒன்றில் தானாகவோ அல்லது ஏனைய முகவர் நிலையங்களுடனான கலந்தாலோசனையுடனோ, உறுதிப்படுத்திக் கொள்ளுதல்;

(ஊ) அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக பல்வேறு மாவட்டங்களுக்கும் மாகாணங்களுக்கும் பொருத்தமான மருத்துவ உத்தியோகத்தர் குழாம் ஒன்றை நியமித்தல்;

(எ) கைத்தொழில் சுகாதாரம் பற்றியும் கைத்தொழில் விபத்துக்கள் பற்றியும் மருத்துவ ஆலோசனையையும் விதப்புரைகளையும் வழங்குதல்;

(ஏ) விபத்துக்களின் விடயங்களில் கொடுபடத் பாலதான நட்டஈட்டின் அல்லது சேதங்களின் தொகை தொடர்பான ஆலோசனைகளையும் விசேஷ வழிகாட்டு நெறிகளையும் வழங்குதல்;

(ஐ) இசைவான அமுல்படுத்தல் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்டு அமுலாக்கப்பட வேண்டிய போக்குவரத்து மருத்துவம் தொடர்பான தராதரங்களை வகுத்தலும் கைக்கொள்ள வேண்டிய வழிவகைகளை விதித்துரைத்தலும்; அத்துடன்

(ஒ) 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பகிரங்கக் கூட்டுத்தாபனங்களை அல்லது அரசாங்க உடைமையாக்கப்பட்ட தொழில் பொறுப்புகளைப் பகிரங்கக் கம்பெனிகளாக மாற்றுதல் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட கம்பெனிகளில், பகிரங்கக் கூட்டுத்தாபனங்களில் அத்துடன் 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட தனியார் பஸ்வண்டிக் கம்பெனிகளில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள சாரதிகளுக்கும் தொழிற்படுத்துநர்களுக்கும் மருத்துவ சேவைகளும் உதவியும் வழங்குதல்.

நிறுவகத்தின் தத்துவங்கள்.

4. நிறுவகமானது அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் குறிப்பாகப் பின்வரும் எல்லாவற்றையும் அல்லது எதையேனும் செய்வதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும் :—

(அ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை (விற்பனை, கொடைமூலமாக வாயினுஞ்சரி, அல்லது வேறு வகையாக வாயினுஞ்சரி) கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், அடகுவைத்தல் அத்துடன் விற்றல் அல்லது வேறு வகையாக விற்றுத் தீர்த்தல்;

(ஆ) ஏதேனும் வங்கியில் அல்லது எவையேனும் வங்கிகளில் நடப்பு, சேமிப்பு அல்லது வைப்புக் கணக்குகளைத் திறந்து பேணிவருதல்;

(இ) இலங்கைக்குள்ளாகவாயினுஞ்சரி, இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி ஆட்களிடமிருந்து அல்லது ஆட்கள் குழுக்களிடமிருந்து மானியங்களை அல்லது நன்கொடைகளை ஏற்றுக் கொள்ளுதல்;

(ஈ) அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அல்லது அதன் பணிகளைப் புரிவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய சகல ஒப்பந்தங்களையும் செய்துகொள்ளுதலும் புரிதலும்;

(உ) ஏதேனும் பிரயோகிக்கப்படாத வருமானம் உட்பட நிறுவகத்துக்குச் சொந்தமான எவையேனும் பணங்களை ஏதேனும் பிணைப்பொறுப்பில் முதலீடு செய்தல் அல்லது எவையேனும் அத்தகைய பணங்களை இலங்கையில் அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனை செய்வதில் முதலீடுசெய்தல் அல்லது அத்தகைய முதலீடுகளை வேறுபடுத்தல் அல்லது உடனடிச் செலவினத்துக்குத் தேவைப்படாத அத்தகைய பணங்களின் ஏதேனும் பாகத்தை ஏதேனும் வங்கியில் நிலையான வைப்புகளில் வைப்பிடு செய்தல்;

(ஊ) அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளை கடனாகப் பெறுதல்;

(எ) ஆளணியினரைக் கொடுத்துமாற்றுவதற்கும் பயிற்சி அளிப்பதற்கும், ஆராய்ச்சிச் சேவைகளுக்காகவும் ஆலோசனைச் சேவைகளுக்காகவும் அத்துடன் பொதுவாக அவர்களின் பொதுக் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்லக்கூடியவாறான அத்தகைய நோக்கங்களுக்காகவும், இலங்கையிலாயினுஞ் சரி,

வெளிநாட்டிலாயினுஞ்சரி, நிறுவகத்தின் குறிக்கோள்களை முழுமையாக அல்லது பகுதியளவில் ஒத்த குறிக்கோள்களைக் கொண்ட மருத்துவ மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் ஒத்துழைப்பதற்கான உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளுதல்;

(ஏ) இச்சட்டத்தின்கீழ் நிறுவகத்தின் பணிகளைப் புரிவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய அலுவலர்களை அல்லது சேவையாளர்களை நியமித்தல், தொழிலுக்கமர்த்தல், ஊதியமளித்தல், அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல் அத்துடன் அவர்களை வேலையிலிருந்து நீக்குதல்;

(ஐ) நிறுவகத்தினால் வழங்கப்படும் சேவைகளுக்கும் உதவிகளுக்கும் கட்டணங்களை அறவிடுதல்;

(ஒ) இச்சட்டத்தினால் விதிகள் ஆக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட கருமங்கள் எல்லாந் தொடர்பிலும் விதிகளை ஆக்குதல்; அத்துடன்

(ஓ) அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானவையென நிறுவகம் அபிப்பிராயப்படும் அத்தகைய மற்றெல்லாச் செயல்களையும் செய்தல்.

## பாகம் II

### சபையை அமைத்தல்

5. (1) நிறுவகத்தின் அலுவல்களின் நிருவாகம், முகாமை, மற்றும் கட்டுப்பாடு என்பன (இதனகத்துப் பின்னர் "சபை" எனக்குறிப்பீடு செய்யப்படும்) நிறுவகத்தின் பணிப்பாளர் சபைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். நிறுவகத்தின் நிருவாகம் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருத்தல்.

(2) சபையானது, நிறுவகத்தின் அலுவல்களை நிருவகிக்கும் நோக்கத்துக்காக, இச்சட்டத்தினால் நிறுவகத்துக்கு அளிக்கப்பட்ட, நிறுவகத்தின் மீது சுமத்தப்பட்ட அல்லது நிறுவகத்துக்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

சபையின் அமைப்பு.

6. (1) சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) ஐந்து பதவிவழி உறுப்பினர்கள், அவர்கள் முறையே :—

(i) போக்குவரத்து என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி;

(ii) 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் அல்லது அவரது பிரதிநிதி;

(iii) பிரதிப் பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதி (வாகன) அல்லது அவரது பிரதிநிதி

(iv) சுகாதாரம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி; அத்துடன்

(v) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி.

(ஆ) போக்குவரத்து அல்லது மருத்துவத் துறையில் அனுபவமுள்ள அல்லது தகைமைகளைக் கொண்ட அல்லது திறமைகாட்டியுள்ள ஆட்களிடையேயிருந்து தெரிவு செய்யப்படும் (இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பிடுசெய்யப்படும்) அமைச்சரினால் நியமிக்கப்படும், நான்கு உறுப்பினர்கள்.

(2) அமைச்சர், சபை உறுப்பினர்களுள் ஒருவரைச் சபையின் தவிசாளராக நியமித்தல் வேண்டும்;

(3) தவிசாளர் நிறுவகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராக இருத்தல் வேண்டும்.

(4) ஆளொருவர் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக அல்லது மாகாண சபை உறுப்பினர் ஒருவராக இருந்தால் அல்லது வந்தால் சபையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது தொடர்ந்திருப்பதிலிருந்து தகுதியற்றவராக்கப்படுதல் வேண்டும்.

7. (1) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலப் பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும். பதவிக் காலம்.

(2) அமைச்சர் அதற்கான காரணம் எதுவும் காட்டாமல் சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரையும் பதவியிலிருந்து அகற்றலாம். சபையின் எவரேனும் உறுப்பினரை அகற்றியமை பற்றி எதேனும் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது.

(3) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதமூலம் தமது பதவியை எந்நேரத்திலும் துறக்கலாம்.

(4) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் இறப்பதன் மூலம், பதவி துறப்பதன் மூலம், பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் அல்லது வேறு வகையாக பதவியை வறிதாக்கியதன் காரணமாக சபையின் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று சம்பவிக்கும் பட்சத்தில், 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்துட்கொண்டு வேறோர் ஆள் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென நியமிக்கப்படுதல் வேண்டும்.

(5) நியமிக்கப்பட்ட உறுப்பினரின் இறப்பு, பதவி துறப்பு, பதவியிலிருந்து அகற்றப்படுதல் காரணமாக அல்லது வேறுவகையாக ஏற்பட்ட வெற்றிடமொன்றை நிரப்புவதற்கென வேறோர் ஆள் நியமிக்கப்பட்டவிடத்து, அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள் அவர் எந்தச் சபை உறுப்பினரைப் பின்னுறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு அத்தகைய பதவியை வகித்தல் வேண்டும்.

(6) எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் சுகவீனம், உடல் இயலாமை அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதிக்கு இலங்கையில் இல்லாமை போன்ற காரணத்துக்காகத் தமது கடமைகளைத் தற்காலிகமாகப் புரிய இயலாதவராக இருக்கின்றவிடத்து, 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்தில் கொண்டு அவரின் இடத்தில் செயற்படவென வேறோர் ஆள் நியமிக்கப்படலாம்.

(7) சபையின் அடுத்தடுத்த மூன்று கூட்டங்களுக்கு அனுமதியில்லாமல் சமுகமளிக்கத் தவறிய சபையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் தமது பதவியை வறிதாக்கியவராகக் கருதப்படுதல் வேண்டும்.

**சபையின் தவிசாளர்.**

8. (1) தவிசாளர், தவிசாளரென்ற தமது பதவியை அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடித மூலம் எந்நேரமும் துறக்கலாம்.

(2) அமைச்சர் எந்நேரத்திலும், அதற்கான காரணம் எதுவும் காட்டாது தவிசாளர் பதவியிலிருந்து தவிசாளரை அகற்றலாம்.

(3) தவிசாளர், சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக தமது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாகப் புரியமுடியாதவராயின், அமைச்சர் சபையின் வேறோர் உறுப்பினரை அவரின் இடத்தில் செயற்படவென நியமிக்கலாம்.

(4) ஓராம், (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக் கமைவாக, தவிசாளரின் பதவிக்காலம் சபையில் அவரது உறுப்பாண்மைக் காலப்பகுதியாதல் வேண்டும்.

**சபையின் கூட்டங்கள்.**

9. (1) சபையின் கூட்டங்கள் எல்லாவற்றிலும் தவிசாளர் தலைமை தாங்குதல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்திற்குத் தவிசாளர் வருகை தராதபோது, அத்தகைய கூட்டத்தில் சமுகமாயிருக்கும் சபையின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அத்தகைய கூட்டத்தில் தலைமை தாங்குதல் வேண்டும்.

(2) சபையின் ஏதேனும் கூட்டத்தில் வாக்குகள் சரிசமமாகவிருக்கும் பட்சத்தில் தவிசாளர் அல்லது அத்தகைய கூட்டத்தில் தலைமை தாங்கும் உறுப்பினர் தமது வாக்குடன் மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டவராக இருப்பார்.

(3) சபையின் கூட்டங்கள் தவிசாளரினால் கூட்டப் படுதல் வேண்டும் என்பதுடன் இச்சட்டத்தின் கீழ் நிறுவகத்தின் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்கு எவ்வளவு தடவைகள் கூடுதல் அவசியமோ அவ்வளவு தடவைகள் நடாத்தப்படுதலும் வேண்டும்.

(4) சபையின் கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(5) சபையின் உறுப்பினர்கள், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

(6) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, அதன் கூட்டங்களை நடாத்துதல் தொடர்பிலும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதல் தொடர்பிலும் பின்பற்றப்படவேண்டிய நடைமுறையை ஒழுங்குபடுத்தும் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.

(7) சபையானது அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும் அதன் கடமைகளைப் புரிகையிலும் அதன் பணிகளை நிறைவேற்றுகையிலும் அமைச்சர் காலத்துக்குக்காலம் வழங்கக்கூடிய அத்தகைய பணிப்புகளுக்கு அமைந்ததாக இருத்தலும் அதற்கிணங்கச் செயலாற்றுதலும் வேண்டும்.

ஏதேனும் வெற்றிடம் காரணமாக அல்லது உறுப்பினரின் நியமனத் திலுள்ள ஏதேனும் குறைபாடு காரணமாக சபையின் நடவடிக் கைகள் செல்லுபடி யற்றனவாகா.

10. ஒன்பதாம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக் கமைவாக, சபையானது அதன் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடம் இருக்கின்றது என்பது எப்படியிருப்பினும் செயலாற்றுவதற்குத் தத்துவம் கொண்டதாதல் வேண்டும்; அத்துடன் சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் ஏதேனும் வெற்றிடம் இருக்கின்றது அல்லது அதன் உறுப்பினரின் நியமனத்தில் குறைபாடு இருக்கின்றது என்ற காரணத்துக்காக மாத்திரம் செல்லுபடியற்றதாகாது.

சபையின் இலச்சினை.

11. சபையின் இலச்சினையானது—

(அ) சபையின் தவிசாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்;

(ஆ) சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய அத்தகைய வடிவமைப்பைக் கொண்டதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம் ; அத்துடன்

(இ) சபையின் இரு உறுப்பினர்களின் சமூகத்தில் தவிர, ஏதேனும் ஆவணத்துக்கும் பொறிக்கப்படுதல் ஆகாது; இவர்கள் இருவரும் தாம் சமூகமாயிருந்தமைக்கு அடையாளமாக அவ்வாவணத்தில் ஒப்பமிடுதல் வேண்டும்.

நிறுவகத்தின் பணியாட்டொகுதி.

12. இச்சட்டத்தினதும் அமைச்சரினால் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளுக்கமைவாக, நிறுவகத்தின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிப்பதற்குச் சபை தத்துவமுடையதாதல் வேண்டும்.

நிறுவகத்துக்கான சேவை குறித்த சில ஒப்பந்தங்களின் நோக்கங்களுக்காக அரசாங்கத்துக்கான சேவையாகக் கருதப்படுதல்.

13. குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச் சேவை புரிவதற்கு உடன்பட்டு அரசாங்கத்துடனான ஒப்பந்தத்தைச் செய்துகொண்டுள்ளவாறான எவரேனும் ஆளை நிறுவனம் தொழிலுக்கமர்த்துகின்றவிடத்து, அவ்வாளினால் நிறுவகத்துக்கு ஆற்றப்படும் ஏதேனும் காலப்பகுதிக்கான சேவை அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கான சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

பகிரங்க அலுவலர்களை நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நியமித்தல்.

14. (1) சபையின் வேண்டுகோளின்பேரில், அமைச்சரின் அமைச்சில் சேவையாற்றுகின்ற பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், பொது நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் ஒருப்பாட்டுடன் கொடுக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் அவ்வலுவலரினதும் சம்மதத்துடன் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு அதேபோன்ற சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதே போன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) சபையின் வேண்டுகோளின் பேரில், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட அலுவலர் ஒருவர் தவிர்ந்த பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அந்த அலுவலரினதும் பகிரங்க நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப் பகுதிக்கு நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதே போன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்பட்டவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும், ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும், ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

சபையின் தத்துவங்களை சபையின் தவிசாளருக்குக் கையளித்தல்.

15. (1) சபையானது, இவ்வுட்பிரிவின் கீழான அதன் தத்துவங்கள் தவிர்ந்த அதன் தத்துவங்கள், கடமைகள், அல்லது பணிகள் என்பவற்றுள் எதனையும் சபையின் தவிசாளருக்குக் கையளிக்கலாம்.

(2) ஓராமுட்பிரிவின் கீழ் ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி கையளிக்கப்பட்டுள்ளவரான சபையின் தவிசாளர், சபையின் பணிப்புகளுக்கமைவாக, அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியை பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

## பாகம் III

### நிதி

நிறுவகத்தின் நிதியம்.

16. (1) நிறுவகமானது அதன் சொந்த நிதியத்தை வைத்திருத்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் நிதியத்துக்குப் பின்வருவன வரவு வைக்கப்படுதல் வேண்டும் :-

(அ) நிறுவகத்தின் பயன்பாட்டுக்கென பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் யாவும்;

(ஆ) அதன் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் நிறுவகத்தினால் பெற்றுக்கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(இ) இலங்கையிலிருந்தாயினும் சரி இலங்கைக்கு வெளியிலிருந்தாயினும் சரி எத்தன்மைத்தான ஏதேனும் மூலத்திலிருந்து கடன்கள், நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியங்கள் வகையாக நிறுவகத்தினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(2) நிறுவகத்தின் நிதியத்திலிருந்து பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) இச்சட்டத்தின் கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் நிறைவேற்றுவதிலும் புரிவதிலும் நிறுவகத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படும்வாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் நிதியத்திலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

நிறுவகத்தின் நிதி ஆண்டு.

17. நிறுவகத்தின் நிதி ஆண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

கணக்குகளின் கணக்காய்வு.

18. ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனக் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பில் அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் நிறுவகக் கணக்குகளின் கணக்காய்வுக்கும் அது தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் IV

### பொது

ஒழுங்கு விதிகள்.

19. (1) இச்சட்டத்தினால் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அல்லது விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஒராமுட்பிரிவின் கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப் படக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஒராமுட்பிரிவின் கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர் இயலக்கூடியளவு விரைவாக அங்கீகரிக் கப்படுவதற்கென பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப் படுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும், அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன் கீழ் முன்னர் செய்யப் பட்ட எதற்கும் பங்கமின்றி, நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி நீக்கப்பட்டதாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப் படுதல் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட வழக்குகளுக்கான பாதுகாப்பு.

20. (1) துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் —

(அ) இச்சட்டத்தின் கீழ் நிறுவகத்தினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக நிறுவகத்துக்கெதிராக;

(ஆ) இச்சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்பின் மீது சபையின் எவரேனும் உறுப்பினரால், நிறுவகத்தின் அலுவலர், சேவையாள் அல்லது முகவரால் நல்லெண் ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப் பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக அவருக்கு எதிராக.

அமைதல் ஆகாது.

(2) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான எவரேனும் அத்தகைய ஆளினால் செய்யப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பாக ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் வழக்கில் அல்லது குற்றவழக்கில் அவரால் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அச்செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் முடிவுசெய்தால், நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

நிறுவகமானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளாக அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

21. நிறுவகமானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக் குள்ளாக, அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

நிறுவகத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.

22. நிறுவகத்தின் எல்லா உறுப்பினர்களும் அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குள்ளாகவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளராகக் கருதப்படுதல் வேண்டும்.

நிலைபெயர் கால ஏற்பாடுகள்.

23. (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மருத்துவ நிலையத்துக்கு அல்லது அச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு உரித்தாக்கப்பட்டனவும் அத்தகைய மருத்துவ நிலையத்தின் நோக்கங்களுக்காக நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளன்று பயன்படுத்தப்பட்டனவுமான அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனம் யாவும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து நிறுவகத்துக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மருத்துவ நிலையத்தினால் அல்லது நிலையத்துடன் அல்லது அத்தகைய மருத்துவ நிலையத்தின் நோக்கங்களுக்காக அச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட

இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் அல்லது சபையுடன் செய்துகொள்ளப்பட்டு நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளன்று இருந்துவரும் எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து விடயத்துக்கேற்றாற்போல நிறுவகத்தினால் அல்லது நிறுவகத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாகவும் உடன்படிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க வலியுறுத்தவும்படலாம்.

(3) ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் அல்லது சபைக்கு எதிராக அச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மருத்துவ நிலையம் தொடர்பாக தொடரப்பட்டு நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளன்று முடிவுறாதிருக்கின்ற எல்லா வழக்குகளும், வழக்கு நடவடிக்கைகளும் அல்லது கருமங்களும் விடயத்துக் கேற்றாற்போல நிறுவகத்தினால் அல்லது நிறுவகத்துக் கெதிராக தொடரப்பட்ட வழக்குகளாகவும் வழக்கு நடவடிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்கத் தொடர்ந்து நடாத்தவும்படலாம்.

24. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

25. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய —

பொருள்கோடல்.

"மோட்டார் வாகனம்" என்பது (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டதாகும்;

"மாகாண சபை" என்பது அரசியலமைப்பின் XVIII ஆம் அத்தியாயத்தினால் தாபிக்கப்பட்ட ஒரு மாகாண சபை என்று பொருளாகும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 (வெளிநாட்டு) ரூபா 1,849 ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.